பேராசிரியர்.

க.வெள்ளைவாரணனார்

அவர்கள் எழுதிய கவிதை

நூல்கள்

சிறப்புப் பாயிரம்.

உலகமெலாங் களிகூர ஒளிர் தமிழி னியல்வளர
இலகுதமி ழிசைவழக்கே எம்மருங்கும் வளர்ந்தோங்கப்
புலவருள மகிழ்கூர யாழ்நூல்செய் புலவர்பிரான்
மலரடியென் சென்னியினு மனத்தகத்தும் மலர்ந்துளவால்.

வேறு

ஒளிர்பரிதி யியக்கத்தாம் சிதர்ந்துதிர்ந்த தோர்பகுதி யுலக மாகி
மிளிர்மலையாய் விளங்கியவந் நாள்தொட்டே நாகரிக விறலான் மிக்குக்
குளிர்கடலி னிடைமிளிர்ந்த குமரிநிலப் பெருமக்கள் குறிப்பிற் றோன்றுந்
தெளிதமிழி னியல்புணர்ந்தார் தெளிவுநிலை பெற்றோங்கித் திகழ்ந்தா ரன்றே.

உள்ளத்தாற் பொருளியல்பை யுணர்த்துமொழி யியலென்பர், உணர்ச்சி வேக
வெள்ளத்தா லெவ்வுயிரும் மகிழ்ந்திசைய ஓசைநலம் விளங்க வின்பங்
கொள்ளச்செய் உரைத்திறத்தாற் குலவுமொழி யிசையென்பர், குறித்த செய்கை
விள்ளத்தா னதுவாகப் பயிற்றுமொழி நாடகமா விரிப்ப ராலோ.

பெருநாரை பெருங்குருகு முதலியநல் லிசைநூல்கள், பேணத் தக்க
பொருளார்ந்த தமிழ்ப்பரதம் முறுவல்செயிற் றியங்குணநூல் சயந்த மென்னுந்
திருவார்ந்த நாடகச்செந் தமிழ்நூல்க ளானவெலாம் திகழ்தென் னாட்டில்
வருவார்போ வார்தமிழி னியல்பனைத்து முணர்ந்துமனம் மகிழ்ந்தார் மன்னே.

அசைவில்செழுந் தமிழ்வழக்கே குமரிமுத லிமயம்வரை யமைந்த வந்நாள்
திசைமுழுதும் மெய்யறிவு சிறந்தோங்கத் தமிழ்ப்புலவர் திகழ்ந்தார், தங்கள்
இசைநிலையை வளர்த்திட்டார், யாழ்குழலென் றெத்துணையோ கருவி கண்டார்,
வசையொழிய வளம்பெருக அறம்வளர்த்தே தமிழர்நிலை மாண்புங் கண்டார்.

புனத்தகத்தே பொழிலகத்தே புறவார்தண் பணையகத்தே புன்னைக் கானல்
நனைத்ததிரை தவழ்மருங்கே கான்யாற்றே யருஞ்சுரத்தே காத லின்ப
மனத்தகத்தே மகிழ்சுரக்கும் மனையகத்தே மன்றிடத்தே மற்று மாங்கே
இனித்ததமி ழிசைபரவு மியல்கண்டார் இன்பநிலை யெங்குங் கண்டார்.

மூவாத விளமைமிளிர் முத்தமிழி னியல்புணர முன்னோர் தந்த
தாவாத தமிழ்நூல்க ளெத்துணையோ தென்மதுரைத் தலைச்சங் கத்தே,
பாவார்ந்த கபாடபுரச் சங்கத்தே, கூடலிலே பயின்ற யாவும்
ஓவாத கடல்கோளால் மேவார்செய் சழக்கதனா லொழிந்த வந்தோ.

அதனால்,

ஆருயிரைப் பொருட்படுத்தா தமரகத்தே தறுகண்ணா ராற்றும் வெற்றிப்
போரினையும் புகழ்சான்ற தமிழிளைஞர் காதலராய்ப் புணர்ந்து வாழுஞ்
சீரினையும் தெய்வவிழாச் சிறப்பினையும் நாடெங்குஞ் சிறக்கப் பாடிப்
பார்புகழ இசைவளர்க்கும் பாணரெனுந் தமிழ்க்குலத்தார் பரிசு தேறேம்.

காதலையும் வெற்றியையுங் கவின்பெறவே வளர்த்துமனக் கவலை மாற்றித்
தீதொழிய அச்சமுடன் பெருமிதத்தை யளவுபெற நிறுத்திச் சீர்சால்
மாதரொடு மைந்தர்களு நானிலத்தைத் திணைமரபின் மகிழ்ந்து வாழ
ஆதரவா யமைந்திசைந்த யாழொடுபண் பாலமுத லனைத்துங் காணேம்.

செந்துறைவெண் டுறைதேவ பாணியொடு வண்ணமிவை தெளியத் தேறேம்
சந்தமுள வரிப்பாட லுரிப்பொருளின் றுறைமுறையே தழுவப் பாடிப்
பைந்தொடியார் யாழதனை யிசைத்துமகிழ் தரக்காணேம் பாரோர் போற்றும்
நந்தமிழி னிசையுணரார் வசையுரைப்பார் நிலைகண்டு நடுங்கி னேமால்.

சேரரிளங் கோவடிகள் செந்தமிழின் முத்திறமுஞ் செழித்து மல்க
ஆர்வமுறச் செய்தளித்த சிலப்பதிகா ரத்தமைந்த அரிய வுண்மை
தேர,அடி யார்க்குநல்லார் இயற்றியரு ளுரையகத்தே சிறப்பக் காட்டும்
பார்பரவு மிசைநுணுக்கம் முதலான நூல்களிவண் பயிலக் காணேம்.

கானல்வரி யுரைகாணேங் கற்றறிந்தார் போற்றவுளக் கருத்தை யீர்க்குந்
தேனனைய பரிபாட லிசையமுதம் செவியினிக்கக் கேளேந் தெய்வ
ஞானமுணர் பிள்ளையார் தமிழ்படர்ந்த யாழ்காணேம் நாளும் இன்னே
மானமுடைத் தமிழர்குலம் மதியிழந்த வகைகண்டே மருள்கின் றேமால்.

அவ்வழி,

இன்னபல பலநினைந்தே தமிழுளங் கவல்பொழுதி லிளங்கோ வென்னும்
மன்னவனே தமிழ்வளர்க்க மீட்டுமிவண் வந்தடைந்தான் மகிழ்மி னென்னத்
துன்னியிவண் முத்தமிழுந் துறைபோக வாய்ந்துணர்ந்து தொகுத்து நோக்கி
இன்னிசைதேர் யாழ்நூலை யியற்றினான் அவன்சீர்த்தி இயம்பக் கேண்மின்.

தென்னிலங்கைக் குணபாலிற் காரேறு மூதூரிற் சிறந்து தோன்றும்
தன்னலமில் வேளாளர் குலத்தலைவன் உயர்சாமித் தம்பி யென்பான்
நன்னலஞ்சார் கண்ணம்மை தனை மணந்து மனையறஞ்செய் நலத்தா லென்றும்
மன்னுதமிழ் வளமலிய மயில்வாக னப்பெயர்கொள் மகன்வந் துற்றான்.

அவனுந்தான்,

தந்தைதா யுளமகிழக் கலைக்கழகந் தனையடைந்தே தகுதி விஞ்சச்
செந்தமிழும் ஆங்கிலமும் வடமொழியும் நனிபயின்று தேர்ந்து கண்ணாய்
வந்தவெண்ணூல் பூதவிய லறிவியனூ லெனைப்பலவும் பயின்று தேறி
முந்துபல கலைநலந்தேர் முருகனெனப் புலமைநலம் முதிரப் பெற்றான்.

தண்ணளிசேர் நல்லுளமுந் தகைசான்ற பெருஞ்சால்புந் தழுவப் பெற்ற
கண்ணம்மை கைத்தலத்தே வளர்தருநாள் முதற்கொண்டே கருத்தி லென்றும்
பண்வளர்செந் தமிழ்ப்பண்பாம் தீஞ்சுவைப்பா லினைப்பருகி மகிழ்ந்தான், இந்நாள்
எண்வளர்பல் கலைகளெலாந் தமிழ்வழியே பரப்பவுளத் தெண்ணி னானால்.

கயவாகு போற்றவொளிர் கண்ணகியார் திருக்கோயில் கண்டு தாழ்ந்து
செயலாரும் புகழ்புரிந்த கண்ணம்மை மகவாகித் திகழுஞ் சீர்த்தி
இயல்பாகப் பெற்றதனால், சிலம்பின்முதற் பதிப்பாண்டிற் பிறந்த லாலீண்
டியலிசைநா டகப்பொருள்சேர் தொடர்நிலையி லிவனுள்ளம் இயைந்த தாலோ.

கருங்கடலிற் கலமுகைத்துக் காற்றினையே தொழில்கொள்ளுங் கருத்து முற்றி
விரும்பியநல் யவனம்வளர் கிரேத்த*முத லாகவெங்கும் மேவி முன்னாள்
ஒருங்குவளர் தமிழ்க்குலத்தார் உலகமெலாம் பரவியதோ ருயர்வு கேட்டும்
மருங்கறியார் அடிமைகளாய் மடிகின்ற தமிழர்நிலை கண்டு மாழ்கி,

சிந்துநதிக் கரையிலிந்நா ளகழ்ந்துகாண் மீனாட்டிற் றிகழ்ந்த முன்னோர்
சிந்தைமகிழ் செல்வவளந் திகழ்ந்தொளிரு நாகரிகச் சீர்த்தி பெற்றே
முந்துபல்லா யிரமாண்டின் முன்னரே புகழ்வளர்த்த முறைமை கண்டும்
செந்தமிழர் வாழும்வகை யறியாது தேய்புநிலை யகற்றல் தேர்ந்தே,

பண்டைமுறை யேயின்றுந் தமிழருயர் நிலைபெற்றுப் பாரில் வாழத்
தொண்டுசெயும் பெருங்காதல் உளத்தகத்தே கிளர்ந்தெழலால் தோற்றுந் திண்மை
கொண்டுலகிற் றுன்பகற்றுந் துறவறமேற் கொண்டுழைக்குங் குறிக்கோள் மேவித்
தண்டமிழர் போற்றுமயில் வாகனனார் துறவறத்திற் சார்ந்தா ரன்றே.

திருவளரு மயோத்திநகர் வந்தஅருந் திறல்திகழும் ஆயர் பாடி
மருவிவளர் கண்ணனெனு மிருவருமோ ருருவாகி வங்க நாட்டிற்
பெருகுபுகழ் காமார்பு கூர்தனிலே பிறந்தருளும் பெரியோன் செய்ய
திருவடியிற் பணிபுரியுஞ் சிவானந்த முனிவனடி சென்னி சேர்த்தி,

அப்பெரியோ னருண்மொழியைச் செவிமடுத்தே யருளறஞ்சே ரன்பி னாலே
மெய்ப்பொருளை யுணர்ந்துமகிழ் தவநிலையிற் றலைப்படுநன் மாண்பின் மேவி
இப்பெரிய வுலகத்தே யெவ்வுயிர்க்குந் துன்பகற்றி யின்ப நல்கும்
ஒப்பரிய புலமைவிபு லாநந்த அடிகளென ஒளிர்கின் றானால்.

*Crete

வேறு

அறிவியற் பொருளி னியல்பினை விளக்கும் அருந்தமிழ்க் கட்டுரை வரைந்தான்,
பிறமொழிப் புலவர் பாநலந் தமிழிற் பெயர்த்துளஞ் சிறந்தனன், புலமைத்
திறமலி கலைதேர் மாணவர் தமக்குச் செந்தமி ழியல்வளந் தெரிக்கும்
அறம்வளர் பணிபூண் டறிவினா லின்ப மார்தரச் செய்தன னன்றே.

ஒப்பருந் திறத்தால் நாடகத் தமிழி னுயர்வினை மதித்துள முவந்தே
செப்பருஞ் சீர்சால் செந்தமிழ் முடிபும் சிறந்தமே னாட்டவர் திறமும்
இப்பரி சென்றே யாவரு முணர மதங்கசூ ளாமணி யெனுநூல்
மெய்ப்பட நடிக்கும் விறல்மிகத் தந்தான் வியந்திவற் புகழ்ந்தனர் புலவர்.

ஆங்கில மொழியிற் புலவராம் பெரியோர் அருந்திறற் புலமையிற் றிளைத்தே
பாங்குறு மவர்தம் பாக்களிற் சுவைதேர் பயிற்சியின் முதற்படி யாக
ஆங்கில வாணி யெனப்பெயர் தந்தே அவர்சொலுங் கவிகளிற் சிலதேர்ந்
தோங்கிய சுவைதேர் தீந்தமிழ்ப் பாட லுரையினை யியற்றினன் மாதோ.

வேறு

செல்வ னண்ணா மலைநிறுவுஞ் செழுங்கலைநேர் நியமமெனத் திகழும் எங்கள்
தில்லை நகர்க் கழகத்தும் தென்னிலங்கைத் தீவகத்தார் பயிலுஞ் சீர்சால்
பல்கலைதேர் கழகத்தும் பாங்குபெறுந் தமிழ்த்தலைமைப் பண்பா ரின்பம்
மல்கவரும் பேராசான் மன்னியபல் கலைவளர்த்தே மகிழுந் தோன்றல்.

கானருகே வயலருகே கடலருகே மலையருகே வாழும் சான்றோர்
தேனெனவே வளர்த்ததமி ழேழிசைநூற் றிறங்கண்டே தெளிவான் ஓர்நாள்
மீனொளிருங் கடலிலங்கை விளங்குமட்டு நீர்நிலையு ளெழுநல் லோசை
தானுணர்ந்தே யேழிசைதே ராராய்ச்சித் திருத்தொண்டிற் றலைநின் றானால்.

இசையுருவாய் நின்றபிரா னெழுந்தருளுந் திருக்கயிலை யிறைஞ்சிப் போற்றும்
நசையதனால் நம்பெருமான் திருவடியே துணையென்ன நயந்து வானின்
மிசையவருஞ் செலற்கரிதாய் அம்மையப்பர் வீற்றிருக்கும் மேன்மை பெற்றே
திசைமுழுதும் விளக்கியசீர்த் திருமலையை வலங்கொண்டு திகழ்ந்தா னன்றே.

பனிமலையின் பாங்கரொளிர் திருக்கயிலா யப்பரப்பிற் பால்போற் றோன்றி
யினிமைதரு மானதநீர்த் துறையாடி இறையருள்சே ரெழில்பெற்றோங்கித்
தனிமையொளிர் தவநெறியால் மனமாசு தவிர்ந்திறைவற் றாழ்ந்து போற்றிக்
கனிமனத்தால் கண்களெலாம் நீர்மல்கக் கசிந்துருகும் வாழ்வு பெற்றான்.

மலைசிலையா எடுத்தபிரான் மகிழ்ந்தருளுந் திருக்கயிலை யென்னுந் தெய்வ
மலைதலையா லேவணங்கி மகிழ்ந்திடுநற் பேறுபெறு மாண்பன் எங்கோன்
மலைவறமெய்ந் நூற்பொருளை மனங்கொள்வோ ரொருமைநிலை வளரத் தெய்வ
மலைமிசையி னிருப்பரென மனங்கொண்டே வளரிமயஞ் சார்ந்தான் மாதோ.

வேறு

துயிலுணர்ந் தெழுந்த நாவலந் தீவாந் தூயதோ ரிதழ்வெளி யீட்டிற்
பயிலுநல் லாசா னெனவமர்ந் தொண்மை பரப்புநற் பொருளுரை வழங்கி
அயலவர் மதித்து மகிழ்தரத் தமிழ்நூ லருட்பொருள் பரப்பினன் அன்பின்
இயல்வளர் இமயத் தவநிலை யுறைந்தே யின்றமிழ்ப் பணிபல புரிந்தான்.

ஐயிரண் டாண்டா யிரவொடு பகலும் அருந்தமி ழிசைத்துறை யாய்ந்தே
மெய்ம்மைசேர் நூலின் றுணிபொருள் பலவும் விளங்கிட ஒருமைசே ருளத்தால்
தெய்வநல் லிமயச் செழுமலை யுறைநாள் திகழ்மலை மகள்திரு வருளால்
ஐயமற் றொழிய முடிபொருள் பலவும் அறிவினிற் றிகழ்தர வறிந்தான்.

அங்கமர் நாளில் நம்பியா ரூரர் ஆளுடைப் பிள்ளையா ரிவர்கள்
பொங்குபே ரன்பாற் போற்றிசெய் திசைத்த பொற்புறு திருப்பதி கச்சீர்
தங்குகே தாரத் திருமலை யெதிரே தோன்றிடத் தாழ்ந்தெதிர் போற்றி
அங்கணர் தமிழுக் கருளிய வினிமை யார்ந்தினந் தேக்கின னன்றே.

இன்னிசை வழியே நற்றமிழ் பரப்பும் இயல்புடைச் சம்பந்தர்க் கந்நாள்
முன்னிலைத் தோன்றி ஞானவா ரமுதம் மருத்திய முதல்வியெம் அன்னை
சொன்னிலை வளஞ்சால் சிலப்பதி காரத் தொகுபொரு ளாய்ந்திடு காலைப்
பன்னிரு பாலைத் திறமுணரின் றுணர்த்தப் பாங்குற வுணர்ந்துள மகிழ்ந்தான்.

இரவினில் யாமப் பொழுதிலே யொருநா ளிசைத்தமிழ் வளந்தெரிந் தருளி
உரவனெம் அடிகள் ஒளிபெறு முள்ளத் துவகைமிக் கோங்கிட வெழுந்தே
பரவின னுமையைப் பாடினன் பணிந்தான் பாரவருங் காதல்மிக் கிசையின்
மரபினைத் தெரிக்க வகுத்தனன் இசைநூல் வண்டமிழ் வளர்ந்தது நன்றே.

வங்கமார் கடல்சூ ழிலங்கைநாட் டினிலே யமருநாள் மன்னிய அன்பின்
பொங்குநற் புகழான் சிதம்பர வள்ளல் பொற்புறு பண்ணை*யின் மேவித்
தங்கிய பொழுதிற் புத்தர்சீர் பரவு சமனொளி திகழ்தரப் பணிந்தே
அங்கமர் திறத்தால் ஆயிர நரம்பின் ஆதியா ழமைதிகண் டறிந்தான்.

முன்னைநான் மறையின் முற்பட வளர்ந்த முதன்மைசால் தமிழிசை மரபும்
நன்னரார் சங்கந் திகழ்ந்தொளிர் நாளில் நயம்பெற வளர்ந்தநற் றிறமும்
பின்னைநா ளிளங்கோ செய்தருள் சிலம்பிற் பிறங்கிய இசைக்கலை நயமும்
இன்னிசைக் கருவி குழல்வழி நின்ற யாழுறுப் பமைதியா மியல்பும்.

* Woodstock Eastate, Ceylon.

இனிமைதேர் யாழிற் றேனென விமிரும் ஏழிசை நரம்பிய லமைவும்
முனிவர்தம் பெருமான் சேரர்தங் குரிசில் மொழிந்தநூற் பாலையின் றிரிபும்
கனிவளர் புலமைத் தமிழர்காண் நூற்று மூன்றெனும் பண்ணியல் வகையும்
பனிமதிச் சடையோற் பரவுதே வார யாப்பிய லமைதியாம் பரிசும்,

குடுமியா மலையிற் பல்லவர் கோமான் குறித்திடு மெழுத்தினிற் காணும்
வடுவிலா விசையும் சாரங்க தேவர் வண்டமிழ் நாட்டினிற் போந்த
அடைவினை யுணர்ந்தே யியற்றிடு நூலி னமைந்ததே வாரநல் லிசையும்
முடிவிலா வின்ப இசைநிலை யுணரக் கிளந்திடு கணிதநூன் முறையும்,

ஏழிசை மரபின் உலகவர் கண்ட இயல்புதேர் பிறபொருள் வைப்போ
டேழியல் வகுத்தே யெழின்மிகும் யாழ்நூ லெனுமிஃ தியற்றினன், தமிழர்
வாழுநல் வழிகண் டுணர்வினை யருளி வளர்விபு லாநந்த னென்பான்,
ஆழிசூ ழுலகி லறிவொளி பரப்பும் ஆண்மைபெற் றெழுந்தனர் தமிழர்

இயல்வளங் காணோம் இசைவளங் கேளோம் என்றுமுன் இரங்கிய தமிழர்
துயரொழிந் துவப்பா ராகவித் தோன்றல் துறவற நெறிதலை நின்றே
மயர்வறத் தெளிந்தீ ராயிரம் யாண்டாய் மறைந்தொழி யாழ்த்திறங் கண்டென்
துயர்தவிர்த் துவந்தான் எனத்தமி ழன்னை தொல்லெழில் பெற்றுள முவந்தாள்.

இனிமுத லாக ஏழிசை வளங்கண் டெழில்பெறும் இசைநலம் என்றும்
தெளிதர, மறைந்த பழந்தமிழ் நூல்கள் புதுநலம் பெற்றொளி திகழ,
ஒளிர்தரு 'பண்டைச் செம்முறைக் கேள்வி* யுருநலம் பெற்றிசை பரப்ப,
அளிதரும் அடிகள் நூல்நலங் கண்டா ரனைவரு மகிழ்ச்சியிற் றிளைத்தார்.

வாழி தமிழர் வளர்புகழால் ஞாலமெலாம்
ஏழிசைதேர் யாழ்நூ லிசைபரப்பி—வாழியரோ
வித்தகனார் எங்கள் விபுலாநந் தப்பெயர்கொள்
அத்தனார் தாளெம் அரண்.

இந்நூற் பாயிரஞ் செய்தான், யாழ்நூ லாசிரியர் மாணவரு ளொருவ னாகிய **க. வெள்ளைவாரணன்.**

* செம்முறைக் கேள்வி : யாழ்நூல் ௱௩௰-ஆம் பக்கம் பார்க்க.